242

சுருக்கம்

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை – புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் – பகுதி II திட்டத்தின்கீழ் 2008–09ம் ஆண்டிற்கு சத்துணவு மையங்களில் உபயோகப்படுத்த முடியாத அலுமினிய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்க ரூ.60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

<u>சமூகநலம் மற்றும் சத்துணவு (சஉதி1) துறை</u>

அரசாணை (ப) எண்.101 நாள் 05–06–2008

படிக்கப்பட்டது :-

1. அரசாணை நிலை எண்.80 சந (ம) சதி துறை நாள் 30–05–2007
2. சமூகநல இயக்குநரின் கடித எண்.8089/2008/சஉதி(தி)1 நாள் 20–5–2008

----

<u>ஆணை:-</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2007–08ம் ஆண்டிற்கு புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் இயங்கும் சத்துணவு மையங்களில் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்த முடியாத அலுமினியப் பாத்திரங்களுக்கு பதிலாக 1667 சத்துணவு மையங்களுக்கு ஒரு மையத்திற்கு ரூ.3000/– செலவினத்தில் புதிய அலுமினிய பாத்திரங்கள் வழங்க ரூ.50/– இலட்சம் ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சமூகநல இயக்குநர் அவர்கள் கடந்த 2007–08ம் ஆண்டைப் போலவே நடப்பாண்டிலும் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் 2000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு பயன்படுத்த முடியாத அலுமினிய பாத்திரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின்படி வாங்குவதற்கு ரூ.60.00 இலட்சம் (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) மிகாமல் செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு சமூகநல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1 | அலுமினிய அடுக்கு | 16 " விட்டம் 8 " உயரம் | 18 கேஜ் |
| 2 | அலுமினிய அடுக்கு | 18" விட்டம் 14 " உயரம் | 16 கேஜ் |
| 3 | அலுமினிய அடுக்கு கைப்பிடி மற்றும் மூடியுடன் | 24 " விட்டம் 14 " உயரம் | 14 கேஜ் |

3. மேற்கண்ட சமூகநல இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனத்துடன் பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் 2000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு பயன்படுத்த முடியாத அலுமினிய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய அலுமினிய பாத்திரங்கள் மேலே பத்தி–2ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் கொண்ட (standard sizes) சமையல் பாத்திரங்களுடன் அவசியமாயின் மாணவர்களின் சராசரி வருகைக்கேற்ப தேவையை கணக்கிட்டு வாங்கி வழங்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மேற்கண்ட தொகை ரூ.60.00 இலட்சத்தை (ரூபாய் அறுபது இலட்சம் மட்டும்) பயன்படுத்தி புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் செயல்படும் 2000 பள்ளி சத்துணவு மையங்களுக்கு (ஊரகம் மற்றும் நகர்ப்புறம்) தலா ரூ.3000/– க்கு மிகாமல் புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்க ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

252

2236 – சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 மதிய உணவு – I திட்டத்தில் சேராதது – AX புரட்சித்தலைவர் எம்ஜிஆர் சத்துணவு திட்டத்தின்கீழ் சமையல் பாத்திரங்களை மாற்றுதல் 24 பொருள்களும் வழங்கலும் (தா.தொ.கு.எண்.2236 02 102 AX 2408)

5. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களுக்கும் தேவையான புதிய அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்க தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தேவைப்படும் நிதியினை பிரித்து வழங்கவும் சமூகநல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2008–09ம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை தேர்வு செய்யவும் ஒப்பளிக்கப்பட்ட தொகையை மாவட்டங்களுக்கு பங்கீடு செய்யவும் அலுமினிய பாத்திரங்கள் வாங்கி வழங்கப்படுவதை கண்காணிக்கவும் சமூகநல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. மேலும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை ரூ.60.00 இலட்சத்திலிருந்து தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளி விதிகள் 2000ல் உள்ள விதிகளை பின்பற்றி புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்கி வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

7. அனுமதி அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தியது குறித்து பயனீட்டுச் சான்றிதழை அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு சமூகநல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. அரசாணை நிலை எண்.1, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 30–1–97ன்படி பயனற்றுப் போன பழைய பாத்திரங்களை மையங்களிலிருந்து பெற்று தொகுத்து உரிய அலுவலர் மூலமாக சந்தை நிலவர விலைப்படி ஏலம் விட்டு பெறப்படும் தொகையை அரசிற்கு இழப்பின்றி உரிய காலத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் செலுத்தி அதன் விவரத்தை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சமூகநல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார் :-

0235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் 60 – ஏனைய சமூக பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 800 ஏனைய வரவுகள் AL – முதலமைச்சர் மதிய உணவுத் திட்டம் (கு.தொ.கு.எண்.0235–60–800–AL–0003)

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 32033/சந/08 நாள் 03–06–2008 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
சமூகநல இயக்குநர், சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை 3.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள், சென்னை 6/9/18/35
மாநில கணக்காயர், ன்னை 9/18/35
தலைமை அரசுத் துறை நிறுவன தணிக்கையர், சென்னை 2.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 6.
தொடக்கப் பள்ளி கல்வி இயக்குநர், சென்னை 6.
இயக்குநர், சர்வசிக்ஷ அபியான், சென்னை 6.
நகல்
நிதித் (சந / வரவு செலவு–II) துறை, சென்னை 9.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் துறை, சென்னை 9.
சந (ம) சதி (சதி2) துறை, சென்னை 9.
இகோ/உந

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

253